

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.11.2023) தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக்குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான மரு.எழிலன் நாகநாதன் சந்தித்து, மருத்துவத் தொழில்நுட்ப தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைக்கும் விதமாக, ஜெர்மனியில் நடைபெற்ற "MEDICA 2023" சர்வதேச மருத்துவ தொழில்நுட்ப சங்கமத்தில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று, பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வந்துள்ளதை தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார்.

## நவ. 26ஆம் தேதி

# அந்தமான் அருகே

## புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி!

அந்தமான், நவ. 23 -

தமிழ்நாடு, புதுச்சேரியில் மழை நீடிக்கும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை நீடிக்கும் நிலையில், மழை நிலவரம் குறித்து தென்மண்டல வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் பாலச்சந்திரன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருப்பூரில் 17 சென்டி மீட்டரும், அவினாசி மற்றும் ஆண்டிப்பட்டியில் தலா 14 சென்டி மீட்டரும், பரங்கிப்பேட்டையில் 13 சென்டி மீட்டரும் மழை பதிவாகியிருப்பதாக அவர் கூறினார். தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் நேற்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

## புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாட்டில்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி!

## வேலூரில் அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்!

வேலூர், நவ. 23 -

பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி 25.11.2023 - சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெறுகிறது.

இப்புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

இதில் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நூற்றாண்டு விழா புகைப்பட கண்காட்சியை புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாடு செய்துள்ளார்.

## சுபமுகூர்த்த தினமெனக் கருதப்படும் 23.11.2023 அன்று

# சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு!

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் தகவல்!

சென்னை, நவ.23-

அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் சுபமுகூர்த்த தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப் பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுவது வழக்கம்.

அந்த வகையில் சுபமுகூர்த்த தினமாக கருதப்படும் எதிர்வரும் 23.11.2023 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என எதிர்பார்க்கப்படுவதால் அன்றைய தினம் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் வழங்கப்பட வேண்டும் என பதிவுத்துறைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக நான்கு தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் என்று பதிவுத்துறை செயலர் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரத்தில் வாகனப் பிரச்சாரப் பேரணி - அமைச்சர் க.பொன்முடி வரவேற்றார்!

விழுப்புரம், நவ 23-

விழுப்புரம் வருகை புரிந்த இருசக்கர வாகன பிரச்சாரக் குழுவினர் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் . மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. முன்னிலையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து விழுப்புரம் நகரம், கோலியனூர் ஒன்றியம், வளவனூர் பேரூராட்சி, கண்டமங்கலம் ஒன்றியம், கோட்டக்குப்பம் நகரம், வானூர் கிழக்கு மற்றும் மேற்கு, கிளியனூர் ஆகிய பகுதிகளில் பேரணியாகச் சென்றனர்.

சட்டமன்ற டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன்,, நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய குழுத் தலைவர்கள் ஆர். எஸ். வாசன், சச்சிதானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ தினகரன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சுவை. சுரேஷ். ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி.க, பி. தெய்வசிகாமணி, வே. கணேசன், வி. ஜி. பிரபாகரன், கு. செல்வமணி,

பி. கே. டி. முரளி, எஸ். எஸ். ஜெயமூர்த்தி, மைதிலி இராஜேந்திரன், கிளியனூர் இராஜி , பேரூர் செயலாளர் பா.ஜீவா, ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி. கே.டி. முரளி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோ, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் தலைமை!

# திருப்பத்தூரில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர், நவ. 23 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தொடங்கப்பட்டுள்ள நீட் விலக்கு நம் இலக்கு என்ற நீட்க்கு எதிரான கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டதை தொடர்ந்து

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் நகர கழகம் சார்பில், திருப்பத்தூர் புதுப்பேட்டை ரோடு பகுதியில் நடைபெற்ற நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆவின் தலைவரும், திருப்பத்தூர் நகர செயலாளருமான எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் டி.ரகுநாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செ. வெங்கடேசன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மோ.சார்லஸ் நவீன்குமார், மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர் டி.எஸ். தமிழ்மணி, நகர இளைஞரணி அமைப்பாளர் டி. எஸ்.மாதேஸ்வரன், ரமணன், திருப்பத்தூர் நகர மன்ற துணைத்தலைவர் ஏ. ஆர்.சபியுல்லா, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் க.நதிம்அஹமத், பி.தௌலத், எஸ்.பிரபு, நகர மன்ற உறுப்பினர்கள் சுகுணா ரமேஷ், பி.நாகு, கழக நிர்வாகிகள் ஆர்.அரவிந்த், ஞானசேகர், ஜெயனந்த், வீரராகவன், பாலாஜி, எஸ்.ராம், சங்கர், எஸ்.மருதுபாண்டி, டி.பி. பெருமாள், பிரதிஸ், விஜய், கமல் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்ட அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று (22.11.2023) நுங்கம்பாக்கம் காம்தார் நகரில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு பங்கேற்று கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவது, இளைஞர் அணி மாநாடு கலந்து கொள்வது, பி.எல்.சி.(BLC)கூட்டம் நடத்துவது, வரும் 24.11.23 மற்றும் 25.11.23, வாக்காளர்கள் பட்டியல் சரிபார்த்தல் சிறப்பு முகாம் நடத்துவது குறித்தும் மற்றும் திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களில் பயன்பெறும் படிவத்தை வட்டக் கழக செயலாளர்களிடம் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு உதகை நகர கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையில் காந்தல் ஆதிதிராவிடர் மக்களுக்கு ஊர்திக்கு ஸ்டெச்சாரும், Freezer Box அவசரகால மஞ்சனக்கொரை தேவாலயத்திற்கு தரைவிரிப்பான் (மேட்) மற்றும் 500க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா வழங்கினார். இதில் நீலகிரி மாவட்ட கழக செயலாளர் பா.மு. முபாரக் மாவட்ட துணை செயலாளர் ஜே. ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர்அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நகர துணை செயலாளர் கார்டன் கிருஷ்ணன், அவைத்தலைவர் ஜெயகோபி, நகர மன்ற உறுப்பினர்கள் செல்வராஜ். தம்பி இஸ்மாயில். கீதா,வணித்தா, மேரி ஃப்புளோரினா, அபுதாகிர், கழக நிர்வாகிகள் மஞ்சுகுமார், ரவீந்திரன், புஷ்பராஜ். விஜயகுமார், ஹென்றி, அமுல், ஸ்டீபன், முத்துராமன், மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. இளைஞர் அணி 2வது

# மாநில மாநாட்டு இருசக்கர வாகன பிரச்சார பேரணி!

## திருவாரூர் மாவட்டத்தில் உற்சாக வரவேற்பு!

திருவாரூர், நவ.23-

தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுவதையொட்டி, மாநிலம் முழுவதும் இருசக்கர வாகன பிரச்சார பேரணியை கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் ஆலோசனைகளின்படி, இளைஞர் அணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த பிரச்சார பேரணியில் பங்கேற்பவர்கள் வள்ளுவர் மண்டலம், பெரியார் மண்டலம், அண்ணா மண்டலம், கலைஞர் மண்டலம் என நான்கு மண்டலமாகப் பிரித்து அவைகளில் அணி அணி யாகச் சென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கலைஞர் மண்டலமான திருவாரூர் மாவட்டம் முழுவதும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம், திருவாரூர் என நான்கு தொகுதிகளிலும் இந்த இருசக்கர வாகன பேரணி சென்ற நிலையில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அவர்களின் ஆலோசனைகளின்படி அனைத்து இடங்க ளிலும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் திரண்டுநின்று உற்சாக வரவேற்பளித்தனர்.

வாகனத்தை ஓட்டி பிரச்சாரம் செய்து வரும் இளைஞர்களை மாவட்ட எல்லையான வடுவூரில் வரவேற்று திருவாரூர் கலைஞர் கோட்டம் வரை பேரணியை எழுச்சியோடு திருவாரூர் மாவட்ட கழகமும், இளைஞர் அணியும் வழிநடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி மாநாடு பிரச்சாரத்தை மேற்கொண்டது. மேலும் வழிநெடுகிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் பொதுமக்களும் நீட் தேர்வு விலக்குக்கான கையெழுத்து இட்டு அதனை இளைஞர் அணி நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை யில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர் நா.இளையராஜா, சேலம் ராஜா, மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம். பி.எடிசன், வினோத்கு மார், தாகிர் அலி, கல்யாண சுந்தரம், சி.கே.எழிலரசன், முருகானந்தம், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகி கள், அனைத்து சார்பு அணிகளின்பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## (நான்காவது பட்டியல்)

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**தலைவர்:** ரா. ஜெய்சங்கர், 28/41, முத்துபூபாலசமுத்திர அக்ரஹாரம், குளித்தலைஅஞ்சல், குளித்தலைதாலுகா, கரூர் 639104.

**துணைத் தலைவர்:** பி. ராமகிருஷ்ணன் 102, மானார்பட்டி, மொடக்கூர்மேல்பாகம், அரவக்குறிச்சிதாலுகா, கரூர்மாவட்டம் 639207.

**அமைப்பாளர்:** கே. சுப்பிரமணியன் வாங்கல்பழையூர், வாங்கல்அஞ்சல், மண்மங்கலம்தாலுகா, கரூர் - 639116.

**துணை அமைப்பாளர்கள்** கி. சரவணன் 1/11, எஸ்.பி. நகர், கிழக்குதெரு, அரவக்குறிச்சிஅஞ்சல், அரவக்குறிச்சிதாலுகா, கரூர்-639201.

கே. குணசேகரன், வெள்ளாளப்பட்டி, மேலூர்முதல்தெரு, புலியூர்அஞ்சல், கரூர்தாலுகா, கரூர் - 639114.

எஸ்.பி. ரவி 9, விஜபிநகர், கணபதிபாளையம்வடக்கு, தாந்தோணிமலைஅஞ்சல், கரூர்தாலுகா, கரூர் - 639005.

கே. குமார், 1/96, முனியப்பனூர் கடைவீதி, மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639116. ஆர். சந்திரசேகரன் 389/6, சரஸ்வதிநகர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639002.

ஆர். கணேஷ்குமார் தில்லைநகர், ராமாகவுண்டன்புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் - 639002.

**தஞ்சை மாநகரம்**

**அமைப்பாளர்** ஜி. விஜயகமல் சடையப்பாவாத்தியார் சந்து, மானோஜிப்பாவீதி, தஞ்சாவூர்.

**துணைஅமைப்பாளர்கள்** ஆர். பாலகிருஷ்ணன் பழைய நெல்லுமண்டி தெரு, தஞ்சாவூர்.

வி. ராஜன் எஸ்.என்.எம். மோகன்ராம் நகர், தஞ்சாவூர்.

பி. தினேஷ்குமார் குடைக்காரத் தெரு, கரந்தை, தஞ்சாவூர்.

க. செல்வகுமார் குஜியான் குளம்கீழகரை, கரந்தை, தஞ்சாவூர்.

ஆர். சரவணன் 5, பெரியார் நகர், எம்.சி. சாலை, தஞ்சாவூர்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

**தலைவர்** ஜெ. குமார் 22பி/1சாத்தான் குட்டை தெரு, காஞ்சிபுரம்

. **துணைத்தலைவர்** என். வெங்கடேசன் 22ஜெ, நாகலுத்துதெரு, காஞ்சிபுரம்.

**அமைப்பாளர்** கே. காண்டீபன் அஞ்சூர், தேனாம்பாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள்** எஸ். பாஸ்கர், 9எ, காமாட்சிநகர், டோல்கேட், சின்னகாஞ்சிபுரம்.

எஸ். ஏழுமலை 26, ராகவேந்திரநகர், செவிலிமேடு, காஞ்சிபுரம். ஜி. ஏகாம்பரம் ஓரிக்கை மற்றும் அஞ்சல், காஞ்சிபுரம்.

பி. கோபால் நாராயண பாளைய தெரு, காஞ்சிபுரம். பி. முத்து தேரடிதெரு, பெரிய காஞ்சிபுரம்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்** எம்.ஜி. கார்த்திக் 1/1035, குமரவேல் தெரு, பவானிநகர், சென்னை.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள் :** ம. பன்னீர், வளவம்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்.

கா. வேலு, துருசுப்பட்டி, கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை.

துரை. மாரிமுத்து மெய்க்குடிப்பட்டி, கந்தர்வக் கோட்டை தாலுகா புதுக்கோட்டை.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** அ. மாது, நாராயணநகர், ஊத்தங்கரை பேரூர், கிருஷ்ணகிரி.

சி. சின்னப்பன் பர்கூர், கிருஷ்ணகிரி.

மரகதவேல் மருதேரி, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி.

அருள்முருகன் விளாங்காமுடி, போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி.

சிவன் பாலேகுளி, பெல்லாரம்பள்ளி, கிருஷ்ணகிரி.

பி. சக்திவேல் சண்முகசெட்டி தெரு, காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி.

**தேனி தெற்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** ஜி.கே. பாண்டி ராஜகோபாலன் பட்டி, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனிமாவட்டம்.

செ. பெருமாள் கோவில்பாளை, தங்கம்மாள்புரம் அஞ்சல், ஆண்டிப்பட்டிதாலுகா, தேனி மாவட்டம்.

வீரமணி வார்டு 9, பஞ்சாயத்து யூனியன் ரோடு, சின்னமனூர், தேனிமாவட்டம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** க. மணிகண்டன் 164ஏ, முதல்தெரு, பண்டாரகுளம், சங்கர்நகர், திருநெல்வேலி

. மீ. அப்துல்ஹமீது 149/2, ஆசிரியர்காலனி, பேட்டை, திருநெல்வேலி.

ஆர். அர்ஜுனன் 344, பெரியார்நகர், சத்தமல்லி, திருநெல்வேலி

**. திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

**தலைவர்** நா. சரவணன் 19/10, 9வது புதுத்தெரு, திருவண்ணாமலை. துணைத்தலைவர் உ. உதயமுத்து 8/7, 3வதுவடக்குத் தெரு, திருவண்ணாமலை.

**தாம்பரம் மாநகரம்**

**துணைஅமைப்பாளர்கள்** சி. மதியழகன் 12, 5வதுதெரு, ஆதம்நகர், நாகல்கேனி, சென்னை - 600044.

கே. ஜெகநாதன் 14, அந்தோணியர் தெரு, சபஸ்டியர்புரம், இரும்புலியூர், கிழக்குதாம்பரம், சென்னை - 600059.

எம். ராஜாங்கம் 6/5, அப்துல்ரசாக் தெரு, மேற்குதாம்பரம், சென்னை - 600045.

எல். பிரபாகரன் 53, அகரம்மெயின் ரோடு, பதுவஞ்சேரி, சென்னை - 600126.

ஏ. ஆறுமுகம் 7/1, சித்திவினாயகர் கோயில் தெரு, சானடோரியம், சென்னை - 600047.

மா. கபிலன் பி6, எப்2, அஷ்வதா பிளாட்ஸ், கஸ்தூரிபாய்தெரு, சிட்லப்பாக்கம், சென்னை - 600064.

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்**

தி.மு.க. தொழிலாளர் அணியின் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட வி.விஜயகுமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ஏற்கனவே துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட **பெப்சி ஜெ. கண்ணன்** (18, திருவள்ளூர் தெரு, ராஜீவ்காந்தி நகர், ஊரப்பாக்கம், செங்கல்பட்டு - 603210) அவர்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். மேலும், கூடுதலாக **என்.எஸ். இளங்கோ,** (152, டி.டி.சி. நகர், ஆதனூர், குன்றத்தூர், காஞ்சிபுரம்) அவர்கள் தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் "அண்ணாஅறிவாலயம்" பிடிசிஜி.செல்வராஜ், சென்னை18. செயலாளர், நாள்: 21112023. தி.மு.க. தொழிலாளர்அணி

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **பி.டி.சி.செல்வராஜ்** |
| சென்னை 18. | செயலாளர், |
| நாள் : 21.11.2023 | தி.மு.க. தொழிலாளர் அணி |